# காலை முரசு

பக்கங்கள் 22

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 31 | புதன்கிழமை | 14.05.2025 அதிர்வு 282


## படுகுழியில் இருந்து நாடு மீண்டெழ அனைவரும் கைகோருங்கள்



03



கனடாவில்

# தமிழின அழிப்பு நினைவகம்: நாமல் எம்.பி. போர்க்கொடி!

### தூதுவரை நேரில் அழைத்து கடும் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும் என்றும் அரசிடம் வலியுறுத்து

"கனடா ஒரு தமிழினப் படுகொலை நினைவுச்சின்னத்தைத் நிர்மாணித்துள்ளமை கவலைக்குரியது. அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கிச் செயற்படுவதற்குப் பதிலாக, இந்தக் குழுக்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பிரிவினையைத் தூண்டிவிடுகின்றன. இந்தப் போக்கு தொடர்ந்தால், உண்மையான நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் கனடாவின் நம்பகத்தன்மையை அது குறைமதிப்புக்கு உட்படுத்தக்கூடும். இந்தச் செயல்முறையில் கனடா ஒரு தனிப்பட்ட நலன்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா

02



# நுவரெலியாவையைச் சேர்ந்த நால்வர் வென்னப்புவ கடலில் மூழ்கி உயிரிழப்பு

(க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டம், வென்னப்புவ கடலில் மூழ்கி நால்வர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மேற்படி நால்வரும் குளித்துக் கொண்டிருந்த அலையில் அடித்துச் செல்லப்பட்டி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா மாவட்டம், பொகவந்தலாவைப் பகுதியில் இருந்து வென்னப்புவ பகுதி கடலுக்கு நீராடச் சென்றவர்களே இந்த அனர்த்தத்தில்

03






உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. இனிமேல் சபைகளின் தலைவர்கள், தவிசாளர்கள் போன்றோரைத் தெரிவு செய்வதற்கான தேர்வு காத்திருக்கின்றது.

பெரும்பாலும் முதலில் மாநகர சபைகளுக்கும், அடுத்து நகர சபைகளுக்கும், தொடர்ந்து பிரதேச சபைகளுக்கும் தலைவர், பிரதித் தலைவர்களைத் தெரிவு செய்யும் தேர்வுகள் நடைபெறும் எனத் தெரிகிறது. அதுதான் இத் தேர்தல்கள் நடைபெறும் ஒழுங்கு முறை.

தமிழர் தாயகத்தில் தெற்கைப் போலவே சில இடங்களைத் தவிர, மற்ற சபைகளில் எல்லாவற்றிலும் தனித்துத் தலைமைப் பதவியை அல்லது பிரதித் தலைமைப் பதவியை பெற்றுக் கொள்ளும் நிலையில் கட்சிகளோ சுயேச்சைக் குழுக்களோ இல்லை.

எல்லாத் தரப்புக்களும் மற்றைய தரப்புகளில் தங்கி இருக்கின்றமையால்

03

# கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு தவிசாளர், உப தவிசாளர் தமிழரசினால் தெரிவு



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கவுள்ள நிலையில், அந்த மூன்று சபைகளுக்குமான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் நடைபெற்றுள்ளது.

மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கும், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை நிர்வாக உறுப்பினர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தெரிவுகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக அருணாசலம் வேழமாலிகிதனும், உப தவிசாளராக புஸ்பநாதன் சிவகுமாரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரி பிரதேச சபையின் தவிசாளராக சிவகுமாரன் ஸ்ரீரஞ்சனும், உப தவிசாளராக திருமதி. குணலக்சுமி குலவீரசிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக சுப்பிரமணியம் சுரேனும், உப தவிசாளராக சிவகுரு செல்வராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தெரிவுகள் தொடர்பான மாவட்டக் கிளையின் எழுத்து மூல தீர்மானம், கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரனால் கட்சியின் பதில் தலைவரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

"இலங்கை அரசாங்கம் கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். ஒரு சட்டபூர்வமான போரின் பின்னணியில் ஒரு தவறான இனப்படுகொலைக் கதையை ஊக்குவிப்பது வரலாற்றைத் திரிபுபடுத்துவது மட்டுமல்லாமல், இலங்கையில் நல்லிணக்க செயல்முறைக்குக் கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும்." - என்றும் நாமல் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

கடனாவில் பிரம்டன் நகரில் சிங்கௌசி பொதுப்பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் குறித்து அதிருப்தியை வெளிப்படுத்தி நாமல் ராஜபக்ஷ எம்.பி. தனது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"இலங்கை இராணுவம் , விடுதலைப் புலிப் பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுத்த மோதலில் எந்த இனப்படுகொலையும் சர்வதேச சட்டத்துக்கமைய நிரூபிக்கப்படவில்லை அல்லது நிரூபிக்கப்பட முடியாத நிலையில், கனடா ஒரு தமிழினப் படுகொலை நினைவுச் சின்னத்தை நிர்மாணித்துள்ளமை கவலைக்குரியது.

தமிழினப் படுகொலை நினைவுச் சின்னம் என்று அழைக்கப்படுவது, கனேடிய அரசால் அரசியல் ரீதியாக இயக்கப்படும் ஒரு நடவடிக்கையாகத் தெரிகின்றது. இது நீண்ட காலமாகத் தமிழ் புலம்பெயர்ந்தோருக்குள் உள்ள சில பிரிவுகளால் முன்னெடுக்கப்படுகின்றது. அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கிச் செயற்படுவதற்குப் பதிலாக, இந்தக் குழுக்கள் தங்கள் சொந்த நலன்களுக்காகப் பிரிவினையைத் தூண்டிவிடுகின்றன.

1975 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மேயர் ஆல்ஃபிரட் துரையப்பாவைக் கொன்றதன் மூலம் வன்முறைச் செயற்பாடுகளைத் தொடங்கிய விடுதலைப் புலிகள், ஏராளமான கொடூரமான செயல்களைச் செய்தனர். இந்தப் பயங்கரவாதக் குழு ஆயிரக்கணக்கான தமிழ்ச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்து, அவர்களை அவர்களது குடும்பங்களிலிருந்து பிரித்து, பெரும் துன்பத்தை ஏற்படுத்தியது. பல தசாப்த கால வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சட்டபூர்வமான இராணுவ நடவடிக்கையில் இலங்கை ஆயுதப் படைகள் விடுதலைப் புலிகளை ஒழித்தன.

விடுதலைப் புலிகள் மற்றும் காலிஸ்தான் போராளிகள் போன்ற பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குழுக்களை ஆதரித்த கனடாவின் வரலாறு, உலகளாவிய பயங்கரவாதம் குறித்த அதன் நிலைப்பாடு குறித்து கேள்விகளை எழுப்புகின்றது. இந்தப் போக்கு தொடர்ந்தால், உண்மையான நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் கனடாவின் நம்பகத்தன்மையை அது குறைமதிப்புக்கு உட்படுத்தக்கூடும். இந்தச் செயல்முறையில் கனடா ஒரு தனிப்பட்ட நலன்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை அரசு கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்துக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். ஒரு சட்டபூர்வமான போரின் பின்னணியில் ஒரு தவறான இனப்படுகொலைக் கதையை ஊக்குவிப்பது வரலாற்றைத் திரிபுபடுத்துவது மட்டுமல்லாமல், இலங்கையில் நல்லிணக்க செயல்முறைக்குக் கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும்.

இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசு தீர்க்கமாகச் செயற்படத் தவறுமாயின் அது ஆயுதப்படைகள், நாட்டின் இறையாண்மை மற்றும் மக்களுக்கு ஒரு அவமானமாக அமையும். இலங்கையின் தேசிய நலன்களைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களைத் திறம்படக் கையாள அரசின் இயலாமையையும் இது எடுத்துக்காட்டுகின்றது." - என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தலைவர் தெளிவு சுவாரஸ்ய மானதாக மாறியிருக்கின்றது.

தமிழர் தாயகத்தில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியை புறந்தள்ளி, அதை எதிர்த்து, அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து, தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆகையினால் மேயர், நகர பிதா, பிரதேச சபை தவிசாளர் தெரிவிலும் தேசிய மக்கள் சக்தியுடன் இணங்கிப் போக முடியாத கட்டாயத்தில் அவை இருக்கின்றன. இந்தப் பதவிகளுக்காகத் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவை - ஒத்துழைப்பை - ஏதேனும் ஒரு தமிழ்த் தேசியக் கட்சி பகிரங்கமாகப் பெற்றுக் கொள்ளுமாயின் அத்தோடு அதன் கதை கந்தலாகிவிடும். அதுதான் நிலைமை.

ஆனாலும் தலைமைப் பதவிகளைக் கைப்பற்றும் நப்பாசையில் தேசிய மக்கள் சக்தியை முற்றாகத் துறந்து விட சில தரப்புகளுக்கு விருப்பமில்லை என்று தெரிகின்றது.

காதும் காதும் வைத்தால் போல தேசிய மக்கள் சக்தியின் ஆதரவை தங்களுக்குப் பெற்றுக் கொண்டால் என்ன என்று அவை கரவுடன் சிந்திக்கின்றன எனத் தெரிகின்றது.

மக்களுக்குத் தெரியாமல் அதை சாத்தியமாக்குவது என்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. தலைவர் தேர்வு வாக்கெடுப்பை இரகசியமாக நடத்தச் செய்வது.

ஆக, தமிழர் தாயகத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பை இரகசிய வாக்கெடுப்பாக முன்னெடுக்க வேண்டும் என்று ஏதேனும் ஒரு கட்சி கோரிக்கை முன்வைத்தால். அல்லது இரகசிய வாக்கெடுப்பாக அதை முன்னெடுக்கும் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தால் அது ஆளும் தரப்பின் (திசைகாட்டியின்) வாக்குகளை இரகசியமாகத் தனக்குப் பெற்றுக் கொள்வதற்கான காய் நகர்த்தல்தான் என்பது நிச்சயமாகிவிடும். ஐயத்துக்கு இடமின்றி உறுதியாகிவிடும்.

ஆகவே மேயர், நகர பிதா, பிரதேச சபைத் தவிசாளர் தெரிவு தொடர்பான வாக்களிப்பை இரகசிய வாக்களிப்பாக நடத்த வேண்டும் என்று கோரும் அல்லது அதற்கு ஆதரவாக நிற்கும் தரப்பு திசை காட்டியின் ஆதரவை ஒளிவு மறைவாக பெற்றுக் கொள்ளும் காய் நகர்த்தலை ஆரம்பித்து விட்டது என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளலாம்.

அப்படி இரகசிய வாக்கெடுப்பைக் கோரப் போகின்ற - அல்லது அத்தகைய திட்டத்தை ஆதரிக்கப் போகின்ற - தரப்புகள் யாவை என்பதைப் பார்த்திருப்போம்.

## நுவரெலியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்குண்டு உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்றும், ஏனைய மூவரின் சடலங்களைத் தேடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# படுகுழியில் இருந்து நாடு மீண்டெழ அனைவரும் கைகோருங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு

"நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க அனைவரும் கைகோர்க்க வேண்டும். இதில் அரசாங்கம், எதிர்த்தரப்பு மற்றும் சிவில் சமூகத்துக்குப் பொறுப்புகள் காணப்படுகின்றன. தமது பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவதன் மூலம் விழுந்துள்ள படுகுழியில் இருந்து மீள எழ முடியும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாத்தறை உராபொல ஸ்ரீ ரத்தன ஜோதி பிரிவேனா வித்யாயநதத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்று வரும் கல்வி மற்றும் கலாசார கண்காட்சியில் நேற்று பிரதம அதிதியாக சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சியாமோபாலி மகா பீடத்தின் ஸ்ரீ ரோஹண பிரிவின் மகாநாயக்கர், வரலாற்றுச் சிறப்புமிக்க சித்தங்கல்லேன ராஜமகா விஹாராதிபதி, ஸ்ரீ சுகத சாசனதஜ, புகழ்பெற்ற ஸ்ரீ தம்மராக்ஷித வினய விஷாரத சங்கைக்குரிய அகலபட பியசிறி மகாநாயக்க தேரரின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"2028 நாட்டுக்கு தீர்க்கமானதொரு வருடமாகும். 2028 முதல் நாம் கடனை மீளச் செலுத்த வேண்டும்.

2033ஆம் ஆண்டு முதல் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு ஐ.எம்.எப். தெரிவித்தது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அதை 2028ஆகக் குறைத்து இணக்கப்பாட்டை எட்டியது. எனவே, 2028ஆம் ஆண்டுக்குள் கடனை அடைக்க அதிக அளவிலான பொருளாதார வளர்ச்சி எமக்கு தேவை.

5 வீத பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பேணிச் செல்ல வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

அரச வருவாயை அதிகரிக்க வேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு கையிருப்புக்களை அதிகரிக்க வேண்டும். இவற்றைச் செய்ய முடியாவிட்டால், நமது நாடு மீண்டும் ஒரு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான துயரத்தை நோக்கிச் செல்லும்.

இந்த யதார்த்தத்தை நாம் புரிந்து கொண்டு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டுக்கு மதிப்பு சேர்க்க வேண்டும்.

நாடு வீழ்ச்சி கண்டால், அது அரசியல், இன, மத அல்லது வர்க்க வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் பாதிக்கும்.

நாட்டுக்குப் பெறுமானம் சேர்க்கும் நடவடிக்கை கல்வி, சுகாதாரம், தொழில், விவசாயம், சேவைகள் போன்ற துறைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

புதிய வாய்ப்புகளைத் தேட வேண்டும். வெறும் வார்த்தைகளால் மட்டுமல்லாது, செயல்களாலும் அபிவிருத்தியை யதார்த்தமாக்க வேண்டும்.

இலவசக் கல்வி மூலம் நாட்டின் சிறார்களுக்கு நவீன கல்வியை வழங்குவது நம் அனைவரின் பொறுப்பாகும். உலகின் மிகவும் அபிவிருத்தி கண்ட நாடுகளைப் பார்க்கும்போது, அந்த நாடுகளின் கல்வி முறைகள் மிகவும் வலிமையானவை என்பதைக் காண்கின்றோம். அங்கு புதுமைகள் மற்றும் நவீனம் காலத்துக்கு காலம் உட்புகுத்தப்படுகின்றன. சர்வதேச தொழிலாளர் சந்தைக்கு ஏற்ற பாடத்திட்டத்தை உருவாக்குவதாலும், புதிய கல்வி முறைகள் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு நவீன கல்வியை வழங்குவதாலும், அபிவிருத்தி கண்ட நாடுகள் கல்வித் துறையில் உச்சத்தை எட்டியுள்ளன.

பின்லாந்து, தென் கொரியா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

நவீன உலகில், பல நாடுகள் நவீன கல்வியில் பயன்படுத்தும் உபகரணங்கள் நமது நாட்டில் பயன்படுத்துவதில்லை. நமது நாட்டின் இலவசக் கல்வி முறையில் ஸ்மார்ட் திரைகள், கணினிகள், டேப்லெட் கணினிகள் போன்றவை பயன்பாட்டில் இல்லை. கல்வியை மனித உரிமையாக்கி, அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நாம் உறுதிபூண வேண்டும். இலவசக் கல்வியும் இலவச சுகாதாரமும் மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களாகும். எனவே, இவை மனித உரிமைகளாக அமைந்து காணப்பட வேண்டும். இதில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, கல்வி மற்றும் சுகாதார உரிமைகளும் அடங்க வேண்டும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது குறித்து நாம் பேசி வருகிறோம். இதற்கு தனிநபர் பங்களிப்பைக் கணக்கிட வேண்டும். இதைச் சரி செய்ய நாம் தனி நபர்களினது திறன்களையும் மனித வள மேம்பாட்டையும் வலுப்படுத்த வேண்டும். இதற்கு ஏற்றாற் போல் இலவசக் கல்வியை மேம்படுத்த வேண்டும்." – என்றார்.




# 'குமுதினி' படுகொலைகளின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல்

குமுதினி படுகொலையின் 40 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை (மே15) நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளது.

நாளை காலை 8.00 மணிக்கு மாவிலித்துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம் மற்றும் தேவசபை ஆலயம் என்பவற்றில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்ம சாந்திக்கான வழி பாடுகள் சம நேரத்தில் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து காலை 9.00 மணிக்கு மாவிலித்துறைமுகப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டோர் நினை வாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி வளாகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

1985.05.15 அன்று காலை பல கனவுகளுடன் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிச் குமுதினித் தாய் சுமந்து சென்ற எம் உறவுகளின் உயிர் நடுக்கடலில் பறிக்கப்பட்டு நான்கு தசாப்த்தங்கள் கடந்து நினைவுகூரும் நினைவு அஞ்சலி நிகழ்வில் அனைவ ரையும் கலந்துகொள்ளுமாறு நினை வேந்தல் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.





# வடமராட்சி கிழக்கு, உடுத்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

(எஸ்.ரகுதீஸ்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் இரண்டாம் நாள் நினைவேந் தலும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங் கலும் வடமராட்சி கிழக்கு, உடுத்து றையில் முன்னெடுக்கப்பட்டுள் ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வடமராட்சி கிளையினரின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பாரதி விளையாட் டுக் கழக மைதான முன்றலில் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

இதில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன், பிரதேச சபை உறுபரபினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# நெல்லியடி பஸ் நிலையத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

(எஸ்.ரகுதீஸ்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் இரண்டாம் நாள் நினைவேந்தலும், முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் நேற்று நெல்லியடி பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வடமராட்சி கிளையினரின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டதுடன், சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.









# தமிழ்த் தேசியப் பேரவையினர் இன்று வெளிநாட்டுத் தூதுவர்களுடன் பேச்சு

வடகிழக்கில் அரசாங்கம் முன்னெடுக்கும் காணி சுவீகரிப்பு தொடர்பில் ஐ.நா. தூதர் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களை தமிழ்த் தேசியப் பேரவையினர் இன்று புதன்கிழமை காலை சந்தித்துக் கலந்துரையாட உள்ளனர்.

அநுர அரசாங்கத்தின் தற்போதைய ஆட்சிக் காலத்தில் பொது மக்களின் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக தமிழ்க் கட்சிகள் பலவும் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இந்த வர்த்தமானியை உடனடியாக மீளப் பெற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தன.



இதில் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் அரசிற்கு காலக்கெடுவை விடுத்திருந்தமையுடன் சட்டப் போராட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளார்.

அதேபோன்றே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தமிழ்த் தேசியப் பேரவையினரும் இதற்கு கடும் எதிர்ப்பையும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளதுடன் ஐ.நா. மற்றும் வெளிநாட்டு தூதராலயங்களுக்கும் அறிவித்திருந்தனர்.

இதன் தொடராக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசியப் பேரவையினர் கொழும்பிலுள்ள ஐ.நா தூதர் மற்றும் வெளிநாட்டு தூதுவர்களை இன்று சந்தித்து கலந்துரையாட உள்ளனர்.

இதற்கமைய இன்று காலையில் ஐ.நா. தூதுவர், இந்தியா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பிரதித் தூதுவர்கள், இராஜதந்திரிகள் ஆகியோரை கொழும்பில் சந்தித்து முறையிட உள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீட்டுப் பட்டோலை!

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் கடந்த 76 ஆண்டுகளாக நாட்டில் ஆட்சி செய்த அரசுகளையும் அரசுத் தலைவர்களையும் குறை சொல்லிச் சொல்லியே, இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிழுக்கின்றது தேசிய மக்கள் சக்தி.

ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் கடந்த 10,15 ஆண்டு கால சாதனை என்ன என்று பட்டியலிட்டால், பிற தரப்புகள் மீது குற்றம் சுமத்தி, புறணி பாடியது மாத்திரமே அதன் சாதனையாக கொள்ளத்தக்கதாக வெளிப்படும்.

முன்னைய ஆட்சியாளர்கள் மீது அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளை அடுக்கி, அதனால் எழுந்த மக்களின் விசனத்தைத் தனக்கு ஆதரவாகப் பயன்படுத்தி, ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி, அந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் கனகாத்திரமான நடவடிக்கை எதனையும் இதுவரை எடுக்கவும் இல்லை, அத்தகைய குற்றச்சாட்டு தன்னுடைய ஆட்சி பீடத்திற்கு எதிராக வராமல் இருப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளையும் அது முன்னெடுக்கவில்லை.

தான் பட்டியலிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய தேசிய மக்கள் சக்தி, இப்போதும் ஆளுந்தரப்பில் அமர்ந்து கொண்டும், அதே குற்றச்சாட்டுப் பட்டோலையைப் படிக்கும் - புறணி பாடும் - வேலையைத்தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும், கணிசமான வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி மீது மக்களின் நம்பிக்கை குறையத் தொடங்கிவிட்டது. அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கத் தெரியாத அந்த ஆட்சிப் பீடத்துக்குத் தொடர்ந்து வாக்களிக்க மக்கள் தயாராக இல்லை என்பது தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மூலம் தெளிவாகி இருக்கின்றது.

இவ்வளவு நடந்தும் கூட, குற்றச்சாட்டுப் பட்டோலையை மாத்திரம் படிக்கும் தன்னுடைய பண்பியல்பிலிருந்து வெளியேவருவதில்லை என்று ஆளும் தரப்பு பிடிவாதம் பிடிப்பதாகத் தெரிகிறது.

வடக்கில் உள்ளூராட்சி தேர்தலில் பெரும் பின்னடைவைக் கண்ட தேசிய மக்கள் சக்தி, தேர்தலில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சி கசிப்பு விநியோகம், பணம் பட்டுவாடா போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டதாகக் கயிறு அவிழ்த்து விட்டது.

இந்த உள்ளூராட்சி தேர்தல் பிரசாரத்தின் போது சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போதைவஸ்தை விநியோகித்து ஆதரவு தேடினார்கள் என்று பிரதி அமைச்சர் சத்துரங்க அபயசிங்க குற்றம் சாட்டியிருக்கின்றார்.

ஆளுந்தரப்பு அதிகாரத்திலிருந்து கொண்டு, இவ்வாறு அநாமேதய குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, மக்களை தவறாக வழிநடத்தாமல், குற்றத்தை இழைத்தவர்களை - அந்தத் தவறுகளை புரிந்தவர்களை - வெளிப்படையாக அம்பலப்படுத்தி உண்மைகளை மக்களுக்கு முன் வைக்க வேண்டும். தேர்தலில் வெல்ல போதை வஸ்துக்களை விநியோகித்தினர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில், யார் அத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற உண்மையை ஆளும் தரப்பு பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என்று மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியிருக்கின்றார். அதேபோன்று தமிழர் தாயகத்தில் தமிழரசுக் கட்சி வாக்குப் பெறுவதற்கு கசிப்பு விநியோகித்தது, பணம் பட்டுவாடா செய்தது என்று கூறிய அமைச்சர் அது தொடர்பில் சம்பந்தப்பட்டோரை அம்பலப்படுத்தி, உண்மையை உலகின் முன் சமர்ப்பிக்க முன்வர வேண்டும்.

ஆளுந்தரப்பில் இருந்து கொண்டு, ஆளுமையான வேலைகள் செய்வதை விடுத்து, அர்த்தமற்ற குற்றச்சாட்டு பட்டோலை படிப்பதை தேசிய மக்கள் சக்தியினர் இத்தோடு நிறுத்திக் கொள்வது நல்லது.





# கொத்மலை பஸ் விபத்து பகுதிக்கு விசேட பொலிஸ் குழு விஜயம்

கொத்மலை பொலிஸ் பிரிவின் கரடி எல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்து குறித்து விசாரிக்க பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீர சூரியவால் நியமிக்கப்பட்ட குழுவின் அதிகாரிகள், பஸ் விபத்து நடந்த இடத்தையும், விபத்தில் சிக்கிய பஸ்ஸையும் , கொத்மலைக்கு சென்று நேற்று செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி ருவான் குணசேகர உள்ளிட்ட குழுவினர், பேருந்து விபத்து நடந்த இடத்தை ஆய்வு செய்து, பின்னர் கொத்மலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று, விபத்தில் சிக்கிய பஸ்ஸை ஆய்வு செய்து, பின்னர் பொலிஸ் நிலையத்திற்குள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த விபத்து குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட்டு, பதில் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

இந்தக் குழுவுடன் நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மானவும் கலந்துகொண்டார்.







# 19ஆம் திகதி முதல் நுளம்பு ஒழிப்பு வாரம்

சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 19ஆம் திகதி முதல் விசேட நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

நேற்று முன்தினம் வரை நாட்டில் 19,724 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் அதிக மானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்தே பதிவாகியுள்ளனர் என டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள் ளது.

# மாணவி பாலியல் துஷ்பிரயோகம்! ஆங்கிலப் பாட ஆசிரியர் கைது!!

மாத்தறை – தெவிநுவர பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 14 வயதுடைய மாணவி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் மாத்தறை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பாடசாலையில் கடமையாற்றும் 38 வயதுடைய ஆங்கிலப் பாட ஆசிரியரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.




பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவி வைத்திய பரிசோதனைக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேற்கொண்டு வருகின்றது.





# நேத்ரபாரதி எழுதிய நூல்களின் வெளியீடு

(பா. சதீசன்)

எழுத்தாளர் நேத்ரபாரதி எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது.

நேத்ரபாரதி எழுதிய புலம்பேசும் மண்வாசம், கற்றுத்தரும் வானம், மகவைத்தேடி எனும் மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவானது

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் சிறப்புற இடம்பெற்றிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கவிஞர் அமரசிங்கம் கேதீஸ்வரன் தலைமையில் கவிஞர் யோ.புரட்சி நிகழ்வினை தொகுத்து வழங்க மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய குறித்த நூல்வெளியீட்டு விழாவில் மூன்று நூல்களான 'புலம்பேசும் மண்வாசம்' (கவிதை) எனும் நூலிற்கான நயவுரையை கவிஞர் வே.முல்லைதீபனும் 'கற்றுத்தரும் வானம்' (சிறுவர் பாடல்) எனும் நூலிற்கான நயவுரையை வன்னிமகள் கவிதாஜினியும், 'மகவைத்தேடி' (சிறுகதை) எனும் நூலிற்கான நயவுரையை உடுவிலூர்க்கலா எழுத்தாளரும் வழங்கியிருந்தனர். இறுதியில் நூலாசிரியருக்கான கௌரவமும், நிகழ்வில் கலந்து சிறப்பித்த விருந்தினர்களுக்கான கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளியின் பிரதேச செயலாளர் கவிஞர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக காங்கேசன்துறை சாரண பயிற்றுநர் , திருமதி சரோஜினிதேவி கனகரத்தினம் ,கௌரவ விருந்தினராக ஈழதமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் அன்பரசன், மற்றும் வணங்காமண் மறுவாழ்வு கழகத் தின் தலைவர் தர்மலிங்கம் ஜீவரத்தினம், அதன் செயலாளர் இரா .சதீஸ், விஜய் பதிப்பக உரிமையாளர் எஸ்.விஜய், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் , சுழிபுரம் அறநெறி பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

20

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?





சுதந்திர மாணவர் அமைப்பின் தயா பத்திரான

அர்த்தமற்ற கொலைகள், களவுகள், ஆக்கிரமிப்பு, அடாவடி எனப் பலவற்றை ஜே.வி.பி. செய்ததாகவே கணக்கு வைக்கப்பட்டாலும், அவற்றில் சில தனிப்பட்ட கிரிமினல் பேர்வழிகளால் தங்களின் நலன் கருதி செய்யப்பட்டன. ஆனால் ஜே.வி.பிக்கும் இவர்களுக்கும் இடையில் நூலிழைகளில் தொடர்புகள் இருந்தன என்றும், சில குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுடனும் நன்கு அறியப்பட்ட கிரிமினல்களுடனும், சுருங்கச் சொன்னால் பாதாள உலக குழுக்களுடனும் (அப்பொழுது அந்தக் குழுக்கள் நாட்டுக்குள்ளேயே பெருவாரி அடங்கியிருந்தன) அவர்கள் நட்புக் கொண்டிருந்தனர் எனப் புலனாய்வாளர்கள் சந்தேகம் கொண்டிருந்தனர். சில அத்துமீறல்களையோ, கொலைகளையோ தங்களிலிருந்து திசைதிருப்ப ஜே.வி.பியினர் பதிலாட்களைப் பாவித்தனர் என்ற அறிக்கைகளையே புலனாய்வாளர்கள் பதிந்து, பல விடயங்கள் முழுமையாக விசாரிக்கப்படாது, முகம் தெரியாத குழுக்களினால் செய்யப்பட்டனவாக விடப்பட்டன.

சில ஆய்வாளர்கள் இவற்றை வேறு கோணங்களில் நகர்த்துவதும் சகஜம். அவர்களது ஆய்வில் தங்களது சந்தர்ப்பவாதங்களுக்காக ஜே.வி.பியினர் இந்தத் தொடர்புகளை மத்திய குழு மட்டத்தில் உள்வாங்கிப் பராமரித்தார்கள் எனத் தகவல்கள் உண்டு. அவர்களது பார்வையில் இந்த நெருக்கம் 1983 இல் ஜே.வி.பி. தடை செய்யப்பட்டு, அவர்களின் முக்கிய தலைவர்கள் பலர் மறைவிடங்களில் வாழ்ந்த போது ஏற்பட்டதான கருத்தைக் குறிப்பிடுகின்றனர். ஜே.வி.பிக்குப் பணம் தேவைப்பட்டது. 84 இல் மீண்டும் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுக்கத்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தயா பத்திரானவின் பூதவுடலுக்கு அஞ்சலி

தொடர்ச்சி▲

தீர்மானித்ததால் சிறிய ஆயுதங்களை கொள்ளளவு செய்யவும், நிதி நிலையைத் திடப்படுத்தவும் என மாவட்ட அமைப்புகளிடமும் பிரதேச தலைவர்களிடமும் நிதி சேர்க்க வழிகள் தேடுமாறு கேட்கப்பட்டது. அதே சமயம் கல்லூரி, பல்கலைக்கழகங்களிலும் ஊடுருவி தங்கள் கட்டுப்பாட்டில் அவற்றை வைத்துக் கொள்ளக் கூடிய மாணவர் குழுமங்களையும் ஏற்படுத்திப் பராமரிக்க பணம் அவசியமாகப்பட்டது. ஏனெனில் மாணவர்கள் உணர்ச்சியில் கூட்டங்களுக்கு வந்தாலும், தங்களை பலப்படுத்தவோ, பிரசாரப்படுத்தக் கூடிய நிதி நிலையில் அவர்கள் இருக்கவில்லை. அதனை கட்சியிடம்தான் எதிர்பார்த்தார்கள். அத்தோடு மாணவர்கள் களவு, கொலைகளில் உடனடியாக இறங்கத் தயக்கம் காட்டினர்.ஆகவே மக்களாலோ, பொலிஸினாலோ அடையாளப்படுத்தக்கூடிய அங்கத்தினர், மறைவில் இருந்தவர்கள் பதிலாள்களைத் தேடி அவர்களூடாக சிறிய கொள்ளைகள், மிரட்டல்கள் மூலம் பணம் சேர்த்து, பின்னர் பதிலாள்களுடன் இணைந்து வங்கிக் கொள்ளைகள், கொலைகளில் ஈடுபட்டு, இப்படியான உறவுகள் தொடர்ந்தன. அந்த உறவினைப் பாவித்து இப்படியான கும்பல்கள் தாங்கள் தனிப்பட்ட முறையில் செய்தவற்றையும் ஜே.வி.பி. மீது சுமத்தி விட்டு வாளாதிருந்து கடைசியில் அவர்களையும் ஏப்பமிட்டனர்.

1987 டிசம்பரில் சிரேஷ்ட பொலிஸ் அத்திசயட்சகர் டெரன்ஸ் பெரேராவும், பின் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஹர்ஷா அபேவர்தனாவும் கொல்லப்பட்ட

தொடர்ச்சி▼



ஜே.வி.பியின் பிலியந்தலை கும்பலின் அழிரிஸ் கொஸ்தா

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

போதுதான் புலனாய்வு பிரிவினர் அதிர்ந்து, இந்த நூலிழைகளைக் கோர்த்து அவற்றின் ஆழங்களை வெளியிட்டனர். டெரன்ஸ் பெரேரா ஜே.வி.பி. பற்றி அவர்களோடு 1971 இல் இருந்து மல்லுக்கு நின்றமையினால் நன்கு அறிந்தவர். ஆனாலும் அவரைக் கொன்ற விடயத்தை நடத்தியவர்களில் ஜே.வி.பி. அங்கத்தினரின் கைரேகைகள் காணப்படவில்லை. இந்த கொலைகளுக்குப் பின்னால் ஜே.வி.பியுடன் தொடர்புகளில் இருந்த பிலியந்தலைப் பகுதி குற்றக் கும்பல் இதை நடத்தியது எனத் தெரிய வந்தது. அந்த கும்பலில் கெசல்வத்த கமராலகே சிறிபால, சுகத் புஷ்பகுமார, ஹந்தகாவ திலக் குமாரதுங்க, அடிரிஸ் கொஸ்தா போன்றோர் இந்தக் கொலைகளோடு சம்பந்தப்பட்டவர்கள் என புலனாய்வுத் தரப்பு அறிக்கைகள் வரத் தொடங்கின். இதில் பிலியந்தலா குற்ற கும்பலை அடியாள்களாகப் பாவித்து உருவாக்கியதற்கு அடிரிஸ் கொஸ்தாவின் பங்கு மிகப் பெரியது. ஏனெனில் அவர்தான் அவர்களுடன் எவ்வளவோ கொள்ளைகளையும், கைது செய்யப்பட்ட அங்கத்தினர்களை விடுவிக்க ஏற்படுத்தப்பட்ட திட்டங்களையும் நகர்த்தியவர். ஜே.வி.பியின் அதிரடிப் படைகளின் முன்னோடியாக இதனை வளர்த்து அப்படியான செல்களை மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரித்தவர்.

இந்தக் கொலைகளுக்குப் பிறகு இந்த இழைகளை புலனாய்வாளர்கள் முன்னைய சில கொலைகளுக்கும் – முக்கியமாக பல்கலைக்கழக மாணவன் தயா பத்திரானாவின் கொலையுடனும் – முடிச்சுப் போட்டனர்.

ஜே.வி.பி. பல்கலைக்கழகங்களில் ஊடுருவி, “தேச பிரேமை சிஷ்ய வியாபாரய” என மாணவர்களிடையே கட்டமைப்புக்களை ஏற்படுத்திய போது, சுதந்திர மாணவர் அமைப்பு (Independent Student Union) கூட்டம் தமது அனுமதியில்லாமல் தமது வழமையான, உரித்துள்ள உடற்பயிற்சிக் கூட்டத்தில் நடத்தப்பட்டதை எதிர்த்து ஆட்சேபங்கள் தெரிவிக்கவும், அதனைப் புறந்தள்ளிக் கூட்டம் நடைபெற்றது. மாணவர் அமைப்புக்களுக்குப் பொறுப்பாக இருந்த ஜே.வி.பி. தலைவர் டி.எம்.பண்டாவும் அப்பொழுது அங்கிருந்து நடப்பவற்றை நோட்டமிட்டு எதிர்ப்புகளுக்கும் கூச்சல்களுக்கும் காரணமான மாணவர்களைக் கவனித்து பத்திரனாவை அடையாளப்படுத்தினர். பின்னர் பிலியந்தலையில் இருந்தவீட்டில்டி.எம்.பண்டாரவும்பலபல்கலைக்கழகங்களில் இருந்து ஜே.வி.பி. ஆதரவாளர்களாக, தொடர்பாளராக வந்திருந்தோரும் கூடியபோது ஜே.வி.பிக்கு ஆதரவான பல மாணவர்கள் பத்திரானா அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்த போது, அப்படி நடந்தால் பல்கலைக்கழகத்தில் ஏற்படக்கூடிய எழுச்சியை கட்டுப்படுத்திவீர்களா என டி.எம்.பண்டா கேட்டதை அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தவர்களும், களனிய பல்கலைக்கழக மாணவர்களும் ஆமோதித்தனர். டி.எம்.பண்டா அதைத் தான் கவனிப்பதாகவும், அதைத் தங்களிடம் விட்டுவிடும் படியும் கேட்டு, அதனை பிலியந்தல குற்றச் செயல் கும்பலின் பகுதிக்கு கொடுக்கப்பட்டது.

பத்திரனவை வெளியே அழைத்துக் கொண்டு வர பிறிதொரு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் போல் இருவரை பத்திரனவோடு நட்பை மேற்கொண்டு, அன்றைய தினம் அந்தப் போலி மாணவர்கள் இருவரும் பத்திரனவும் அவரது சகா சோமசிறியும் அவர்களோடு தேநீர் அருந்திக்கொண்டு பேசுவது என்று வெளியே வந்த போது, திடீரென வந்த வெள்ளை வானில் இருந்து இறங்கிய இருவர் தாங்கள் புலனாய்வுப் பகுதி என்று கூறி நால்வரையும் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றனர். பத்திரனவும் சோமசிறியும் அவர்கள் புலனாய்வுப் பகுதியினர் எனவும் தாங்கள் விசாரணைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர் எனவும் நம்பினர். ஆனால் சிறிது தூரத்தில் மற்றைய இருவரையும் இறக்கி விட்டு, இந்த இருவரோடும் பொல்கொட ஏரியை நோக்கி வான் போனது. வானில் இருந்த இருவரையும் இறக்கி, ஆடைகளைக் களைய உத்தரவிட்டு, பின் பத்திரனவின் கழுத்தை பிளேட்டினால் வெட்டிக் கொன்றனர். சில அடிகளுக்கு அப்பால் சோமசிறியை அவரது கழுத்தின் பின்பக்கத்தில் கோடரியால் வெட்ட முயன்று கொண்டிருந்த போது ஏரியில் படகு வருவதை அவதானித்தவர்கள், அப்படியே விட்டு விட்டு ஓடி விட்டார்கள். அந்த இருவரையும் கொலை செய்து, ஆடைகள் இன்றி அவர்களது உடல்களை சாக்குக் கோணிகளில் கட்டி, இரும்புச் சங்கிலிகளால் பிணைத்து, ஏரியில் வீசுவதுதான் திட்டம். விட்டுச் சென்ற சங்கிலியிலும்,

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



கொலை செய்யப்பட்டுக் கிடக்கும் தயா பத்திரான

தொடர்ச்சி▲

கோணிப்பைகளிலும் அது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் ஆளரவத்தால் நிலைமை குழம்பி விட்டது. சோமசிறி பின்னர் ஆஸ்பத்திரியில் பிழைத்தமையால் விவரங்கள் வெளிவந்தன. மாணவர்களாக நடித்தவர்களின் அங்க அடையாளங்களைக் கொடுத்தும் அவர்களைப் பல்கலைக்கழகத்தில் அடையாளப்படுத்த முடியவில்லை. கொலையைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் விசாரணைகளில் வாகனத்தை ஓட்டியவர் அடிரிஸ் கொஸ்தா என்பதும், மாணவர்களாக நடந்தவர்கள் ஜே.வி.பியின் பிலியந்தலா கும்பலின் பகுதி எனவும் தெரியவந்தது. அடிரிஸ் கொஸ்தா இந்தக் கொலைக்காக அதனைச் செய்த இருவருக்கும் தலா 2,500 ரூபா வேதனமாகப் பேசி இருந்தார். இந்தச் சம்பவம் பல்கலைக்கழகங்களை உலுக்கியமையால் ஜே.வி.பிக்கு ஆதரவான மாணவர்களே மாதக் கணக்கில் விரிவுரைகளை தவிர்த்து, ஜே.வி.பியுடன் தங்களுக்கு சம்பந்தமில்லை என அறிவித்தும், பத்திரனவின் அஞ்சலிக் கூட்டத்தில் பங்கு பற்றிப் பேசிய விஜயகுமாரங்க இது ஜே.வி.பியினால்தான் நடத்தப்பட்டது என நேரடியாகவே குற்றம் சுமத்தினார். இப்படியான கடத்தல்களும் கொலைகளும் தொடர்ந்தன. தேவைகள் வளர்ந்தமையால் அடியாள்களை விட்டுக் கொள்ள முடியாது, காலில் சுற்றிய பாம்புகளாகக் கொண்டு திரிந்தனர்.

அறகலயப் போராட்டம் எந்த வன்முறைகளுமின்றி சாத்வீகமாக நடந்த போது, மஹிந்த ராஜபக்ஷவின் போதனைகளில், அவர் வீட்டில் இருந்து புறப்பட்ட கும்பல் போராட்டக்காரர்களை அடித்து, அவர்களது கூடாரங்களை நொறுக்க, நிலைமை அல்லோல கல்லோலம் ஆகியது.

அதனைத் தொடர்ந்த வன்முறைகளில் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டு, அவரது கட்சியின் நாடாளுமன்ற அங்கத்தினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு, சூறையாடப்பட்டு, அவரது பெற்றோர்களின் நினைவு சின்னங்களே தகர்க்கப்பட்டன. ஜனாதிபதி மாளிகைக்கு போராட்டக்காரர்கள் படையெடுத்துச் சென்று அங்கு அட்டகாசங்கள் செய்ய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறித் தப்பிக்க மஹிந்த ராஜபக்ஷவும் குடும்பமும் திருகோணமலை இராணுவ முகாமில் தஞ்சமிட அதனைச் சுற்றிச் சுற்றிப் படகுகளில் போராட்டக்காரர்கள் வட்டமிட்டனர். இந்தச் சமயத்தில் பின் கதவால் ஜனாதிபதியான ரணில் இப்படியான வன்முறையாளர்கள் சிலரைக் கைது செய்தாலும், அவர்கள் யார் எனவோ, பின்னணிகளோ தெளிவாக்கப்பட்டதில்லை. அறகலய குழுமத்தின் பகுதி என்று பொதுவாகவே கருதப்பட்டு, உணர்ச்சிகளில் கொந்தளித்த பொதுமக்கள் எனவும் சமாதானம் சொல்லப்படுகின்றது.

அதுபோல் தொடர்ந்தும் தாராளமாக நடக்கும் பாதாளக் குழுக்களின் கொலைகளுக்கும், அவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இருக்கும் உறவுகளும், இவற்றோடு முன்னைய படை வீரர்கள் சம்பந்தப்படுவது வரலாறுகளின் தொடர்ச்சியா என்ற கேள்விகளையும் ஊடகங்கள் எழுப்பத் தயங்கவில்லை.

ஜே.வி.பியின் பல அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் தலைவர்களும் கைது செய்யப்பட்டு அழிக்கப்படுவதற்குக் கூட அவர்களது சந்தர்ப்பவாத போக்குகளே காரணமாயின. அது அவர்கள் படையினரை ஒட்டி எடுத்த நிலைப்பாட்டில் தொடங்கி அவர்களைப் பழிவாங்கியது.

அதுவரை காலமும் படையினரை நாட்டுக்காகப் போராடும் வீரர்கள் என அவர்களைப் புகழ் பாடி, அவர்களது தேசாபிமானத்துக்குத் தலைவணங்கி, தங்களது தேசாபிமானத்துடன் இணைந்து நாட்டை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரியவர்கள், பார்த்துப் பார்த்துக் காத்திருக்க அவை நடைபெறாமல், முகம் தெரியாத பல குழுக்களால் முக்கியமாக மக்களின் புரட்சிகர சிவந்த ராணுவம் (Peoples Revolutionary Red Army - PRRA), கறுப்புப் பூனைகள் (Black Cats), உக்குஸா (UKUSSA) என்பன போன்ற வன்முறையை ஆதரித்த குழுக்கள் ஜே.வி.பிக்கு எதிராக – அவர்களின் முடிவுக்காக – போஸ்டர்கள் ஒட்டி, பல கொலைகள் அடுக்கடுக்காக நடந்து, மக்களுக்கு திகிலூட்டின. படையினர் இந்தக் குழுக்களின் பின்னால் இருக்கிறார்கள் என ஜே.வி.பி. நம்பி, தங்களைக் கொல்லுபவர் படையினராக அடையாளம் காணப்பட்டால் அவர்களது குடும்பத்தினர் அனைவருமே அழிக்கப்படுவார்கள் எனப் போஸ்டர்களால் அறிவித்தது.

(தொடரும்)



# உரிய நேரத்தில் சம்பளம் வழங்கப்படாமையினால் வவுனியா போக்குவரத்துச் சபை ஊழியர்கள் அவதி

(கி.வசந்தன்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையின் ஊழியர்களுக்கான கடந்த மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

வவுனியா சாலையில் பணிபுரியும் சாரதிகள், காப்பாளர்கள், பொறியியலாளர்கள் ஆகிய ஊழியர்களுக்கே இவ்வாறு சம்பளம் வழங்கப்படவில்லை.

இந்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதி அவர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டு வந்துள்ளது. எனினும் இன்றுடன் 5 நாள்கள் கடக்கின்ற நிலையில் இம்முறை இதுவரை அது வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைகாலம் இடம்பெற்று–வரும் நிலையில் தமக்கான சம்பளம் வழங்கப்படாமையினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.







# பனை மரங்களைப் பொறுப்பு வைத்து வங்கியில் கடனைப் பெறும் திட்டம்!

## இவ்வாண்டு இறுதியில் நடைமுறைக்கு வருமாம்

(த.சுபேசன்)

வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள தங்க நகைகள் மற்றும் நிலங்களை பொறுப்பு வைப்பது போன்று பனை மரங்களைப் பொறுப்பு வைத்து வங்கிக் கடனைப் பெறும் திட்டம் ஒன்றை இவ் வருட இறுதிக்குள் பனை அபிவிருத்திச் சபை அறிமுகப்படுத்த இருப்பதாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

பனை மரம் பண மரமாக மாற்ற மடையப்போகின்றது. காணிகளில் உள்ள பனை மரங்களை அவசரப்பட்டு அழிக்க வேண்டாம். வங்கிக் கடனுக்கு பொறுப்பாக பனை மரங்களை ஈடு வைக்கும் திட்டம்ஒன்றைபனைஅபிவிருத்திச்சபைதயாரித்து வருகிறது. இவ்வருட இறுதிக்குள் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

கற்பகதரு என முன்னோரால் அழைக்கப்பட்ட பனை மரத்திற்கு தற்போது விடிவு காலம் பிறந்துள்ளது. பனை சார்ந்த கைப்பணிப் பொருள்கள், பனை சார்ந்த உணவுகளுக்கு புலம்பெயர் மக்களிடம் இருந்து நல்ல வரவேற்புக் கிடைக்கின்றது.

அத்துடன் மேற்குலக நாடுகளில் பனம் சாராயம் உள்ளிட்ட மதுசாரங்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது.

இந்த நிலைமையில் ஒரு பனை மரம் மூலம் வருடம் ஒன்றிற்கு சராசரியாக ஒரு மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற முடியும்.

அந்த அடிப்படையில் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் உள்ள 15மில்லியன் பனை மரங்களையும் உச்ச அளவில் பயன்படுத்தி எமது மாகாணங்களின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியைப் பெற முடியும்.

எந்த ஒரு பயிர் மூலமும் வருடத்திற்கு ஒரு ஏக்கரில் ஒரு மில்லியனை ஈட்ட முடியாது. ஆனால் ஒரு பனை மரம் மூலம் அந்த வருமானத்தைப் பெற முடியும். பனையைப் பாதுகாப்பதன் ஊடாக வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியும், சுற்றுச்சூழலைப் பேண முடியும். நாட்டிற்குத் தேவையான அந்நிய செலவானியை ஈட்டிக்கொள்ள முடியும்.

பனை மரத்தை வைத்து வங்கிக் கடன் பெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது பனம் துறையில் புதுப் புரட்சி ஒன்று உருவாகும்.

பொறுப்பு வைக்கும் பனை மரத்தில் பனங்கள், கருப்பணி உள்ளிட்ட உற்பத்திகளை மேற்கொள்ளும் பட்சத்தில் வங்கிக் கடனுக்கான வட்டியை பனை அபிவிருத்திச்சபை செலுத்தும் திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்தி பனம் தொழிற்துறையை மேலும் ஊக்குவிக்க யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

பனை சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதிசெய்வதன் ஊடாக வருமானம் கிடைப்பதால் வட்டியைச் செலுத்துவது இலகுவான விடயம்.

இவ் வருட இறுதிக்குள் இந்தத் திட்டம் அமைச்சரவை ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

இதனூடாக பனை மரத்தின் அழிவுக்கு காரணமாக இருப்பவர்கள் மனங்களில் பனையை சொத்தாகக் கருதி பாதுகாக்கும் மனநிலையை ஏற்படுத்த முடியும்.

அத்துடன் பனம் தொழிற்துறைக்கும் புத்துயிர் கிடைக்கும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.








# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் நேற்று

(கி.வசந்தன்)

தமிழின அழிப்பின் 16 ஆம் ஆண்டை முன்னிட்டு வவுனியா வாடி வீட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்பாடும் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது, முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தில் மரணித்த பொது மக்களின் நினைவாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றாவினால் ஈகைச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதுடன், நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வாடி வீட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# கொழும்பு சாயி பாபா மத்திய நிலையத்தில் வெசாக் நாளில் விசேட சமய அனுஷ்டானம்

வெசாக் தினமான நேற்று முன் தினம் கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் விஷேட சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.

இதன்போது, ஜிந்துப்பிட்டி போதி ராஜ பௌத்த நிலையத்தின் பிரதான மதகுரு வண.கோட்டே சுமனனந்த தேரர் அனுசாசன உரை நிகழ்த்தினார். சாயி பாபா (இலங்கை) அறங்காவலர் சபை தலைவர் எஸ்.என்.உதயநாயகன், மத குருவுக்கு வஸ்த்திர தானம் வழங்கி கௌரவித்தார். நிகழ்வில் அறங்கா வலர் சபை பொதுச்செயலாளர் சிவா இராஜஜோதியும் பங்கேற்றார்.

(படப்பிடிப்பு:- எஸ். விதுஷன்)








# வெண்கல செட்டிகுளத்தில் ஆட்சி நிர்வாகம் யார் வசம்?

## இரு முனைகளில் கடும் போட்டி; தெரிவு திருவுளச்சீட்டுக்கு செல்லும் நிலை!

(கி.வசந்தன்)

வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இரு முனையில் கடும் போட்டி நிலை ஏற்பட்டுள்ளது.

18 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி - 2,838 வாக்குகள் - 4 உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தி - 2,085 வாக்குகள் - 3 உறுப்பினர்கள் (பட்டியல்-1), இலங்கை தமிழ் அரசுக் கட்சி - 1,957 வாக்குகள் - 3 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி - 1,661 வாக்குகள் - 2 உறுப்பினர்கள் (பட்டியல்-1), சிறிலங்கா தொழிலாளர் கட்சி-1,573 வாக்குகள்-2 உறுப்பினர்கள் (பட்டியல்-2), ஜனநாயக தேசிய கூட்டணி - 1,225 வாக்குகள் - 2 உறுப்பினர்கள் (பட்டியல்-1), சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 626 வாக்குகள் - 1 உறுப்பினர் (பட்டியல்-1), சுயாதீன குழு 2 - 340 வாக்குகள் 1 உறுப்பினர் (பட்டியல்-1) என பகிரப்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்பவற்றுக்கு வவுனியாவின் ஏனைய சபைகளில் ஆதரவு வழங்கியுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அங்கு தான் ஆட்சி அமைக்க தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்பவற்றின் ஆதரவைப் பெற முயல்கிறது.

மறுபுறம், தேசிய மக்கள் சக்தியும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இரு தரப்பும் 18 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்கள் கொண்டுள்ளன எனத் தற்போதைய நிலையில் தெரியவருகிறது.

குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி ஒரு கூட்டாக 9 ஆசனங்களைக் கொண்டுள்ளன. மறுபுறம் தேசிய மக்கள் சக்தி, சிறிலங்கா தொழிலாளர் கட்சி, ஜனநாயக தேசியக் கூட்டணி, சிறிங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுயாதீன குழு-02 என்பன இணைந்து ஒரு அணியாக 9 ஆசனங்களை கொண்டுள்ளன.

இந்நிலையில், வவுனியா மாநகர சபையில் சிறிலங்கா தொழிலாளர் கட்சியுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரே சின்னத்தில் இணைந்து போட்டியிட்ட போதும், கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தமிழரசுக கட்சியுடன் இணக்கம் கண்டுள்ளமையால் வெண்கல செட்டிகுளத்தில் தேசிய மக்கள் சக்திக்கு சார்பாக இலங்கை தொழிலாளர் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க செய்படுவார்களா என்ற கேள்வியும் உள்ளது.

ஆதரவு வழங்கினால் சபை தவிசாளர், உப தவிசாளர் தெரிவின் போது சமநிலை ஏற்படும் இடத்தில் திருவுளச் சீட்டின் மூலமே தவிசாளர், உப தவிசாளர் தெரிவு செய்யப்படுவர். பேரம் பேசல்கள் தொடரும் நிலையில் யாராவது மாறுவார்களா அல்லது திருவுளச் சீட்டா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.



# தொழில் நீதிமன்ற முன்னாள் நீதிபதி விமலராஜா மறைவு

பிரபல சட்டத்தரணியும் ஓய்வுபெற்ற தொழில் நீதிமன்ற நீதிபதியுமான வேலாயுதம் விமலராஜா கடந்த திங்கட்கிழமை காலை ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தனது 90ஆவது வயதில் காலமானார்.

வடமராட்சி கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட விமலராஜா கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்பு கிளையின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றினார். அவரது இறுதிச்சடங்கு நாளை வியாழக்கிழமை சிட்னி நகரில் நடைபெறும் என்று குடும்பத்தவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

# தமிழரின் இலக்கும் பயணமும் தடம் மாறவில்லை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அதற்கு சாட்சி

## அருட்தந்தை சத்திவேல் கூறுகின்றார்



(பா.சதீசன்)

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் அரசியல் தாகமும் அது நோக்கிய பயண இலக்கும் மாற்றமடையவில்லை என்பதற்கு முள்ளிவாய்க்கால் நிறைவேந்தல் உலக நாடுகளுக்கு உயிர்ப்பு மிகு சாட்சியாகும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஈழத் தமிழர்களின் அரசியல் எழுச்சியையும், அதன் தாகத்தையும், அதற்கான போராட்ட வலிமையையும் அடக்கி, ஒடுக்கி, அழிக்க சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் மூன்று தசாப் தங்களுக்கு மேலாகப் பாரிய போர் தொடுத்து, இறுதியில் இனப்படுகொலையை நிகழ்த்தி, மனித பேரவலத்தை ஏற்படுத்தினாலும், வடக்கு -கிழக்கு தமிழர்களின் அரசியல் தாகமும் அது நோக்கிய பயண இலக்கும் மாற்றமடையவில்லை என்பதற்கு முள்ளிவாய்க்கால் நிறைவேந்தல் உலக நாடுகளுக்கு உயிர்ப்பு மிகு சாட்சியாகும்.

எனினும் தமிழர் தேசத்தில் ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகளின் தேர்தல் அரசியல், தலைமைத்துவ போட்டிகள் காரணமாகவும் சுகபோக அரசியலுக்காகவும் கொள்கை தடம் மாறியவர்களாலும் அவர்களின் வழிகாட்டலில் இனப்படுகொலையாளர்களுக்கே வாக்களிக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டார்கள் என்பதன் குற்றப் பலியை தடம் மாறிய அரசியல் கட்சிகளும் அதன் தலைமைத்துவங்களும் ஏற்றே ஆக வேண்டும்.

இதன் காரணமாக தமிழ் இன அழிப்புக்கும், இனப்படுகொலைக்கும் துணை நின்ற பிரதான சக்தி எமது மண்ணில் கோட்டை அமைத்து அதனை விரிவாக்கம் செய்து கொண்டிருக்கிறது. இதற்கு எம்மவர்களே துணை நிற்கும் அரசியல் சூழ்நிலை எம் மண்ணில் தோன்றியிருப்பதை அவதானிக்கலாம். இது நாம் அனுபவித்த முள்ளிவாய்க்கால் அவலத்தை விட மிகப் பயங்கரமான அரசியல் அவலத்திற்கே வித்திடும் என்பதை இச் சந்தர்ப்பத்திலாவது அரசியல் கட்சிகளும் அதன் தலைமைத்துவங்களும் உணர வேண்டும். இல்லையேல் வரலாறு இவர்களை மன்னிக்காது.

ஆதலால் தமிழர் தேசம் காக்க போராடியவர்கள் இரத்தம் சிந்திய நிலத்தின் நின்று அரசியல் செய்யும் கட்சிகள் தனது வரலாற்று தவறினை திருத்திக் கொள்ளவும் அதன் அடையாளமாகவும் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைகளில் எவ்வாறு கூட்டாகச் செயல்பட போகின்றோம் என்று தொடரில் பொது கூட்டுக் கொள்கை பிரகடனம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இக்கூட்டு பிரகடனம் எம் தேசத்திற்கும், தேசியத்திற்கும் எதிராக எம் மண்ணில் சதி வலை விரிக்கும் அரசியல் சக்திக்கும் அவர்களின் அரசியல் துணைப் படையினருக்கும் எமது வலிமையை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

யுத்தக்காலத்தில் படையினரின் மூலம் எமது நிலங்களை ஆக்கிரமித்துள்ள சிங்கள ஃ பௌத்த பேரிவாத அரசும் அதன் காவலர்களான ஆட்சியாளர்களும் தாம் உருவாக்கிய அதே கருத்தியல் கொண்ட பல்வேறு திணைக்களங்கள் ஊடாகவும், நேரடியாக விகாரைகளை கட்டியும் நிலங்களை கையகப்படுத்தியவர்கள் தற்போது வடக்கு கிழக்கு உபதேசங்களின் வளம் மிகுந்த கரையோர பிரதேசங்களை கையகப்படுத்தி, எம்மவர்களை நிலமற்றவர்களாக்கி, வறுமைக்குள் தள்ளுவதற்கான வர்த்தமானி வெளியிட்டுயிருப்பது தற்போதைய ஆட்சியாளர்களின் உண்மை அரசியல் கோர முகத்தினை அம்பலப்படுத்தி உள்ளது.

இதனை கூட்டாக மக்கள் சக்தியோடு எதிர்த்து நிலம் காத்திட அவசர வேலை திட்டமும் வேண்டும். இதனை நோக்காகக் கொண்டும் செயல்படுவதற்கான முன்னோடி செயற்பாடாக அடிமட்ட மக்களைத் திரட்டி நம்பிக்கையூட்டும் செயற்பாடாக உள்ளூராட்சி மன்றங்களின் இயக்கம் தொடர்பில் அரசியல் கொள்கையில் தடம் மாறாத நம்பிக்கை மிகு கொள்கைல் பிரகடனம் செய்திட கட்சித் தலைவர்கள் முன் வர வேண்டுமென அவசர வேண்டுகோளையும் இவ்வேளையில் விடுக்கின்றோம்.

மீண்டும் கூறுகின்றோம் கூட்டு அரசியல் பிரகடனம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை தாம் சார்ந்த கட்சி வசப்படுத்துவதற்காவோ, கட்சி அரசியலை பலப்படுத்துவதற்காகவோ, தனிநபர் பிம்பத்தை ஏற்படுத்துவதற்காகவோ அமையக்கூடாது. தாயகம் மற்றும் தேசிய அரசியலை நோக்கிய மக்கள் அரசியலை மையப்படுத்தி, உள்ளூராட்சி சபைகள் மூலம் அபிவிருத்தியோடு மக்கள் அரசியலை முன்னெடுக்க அரசியல் கட்சிகளும் அதன் தலைமைத்துவங்கள் தியாக உணர்வோடு விட்டுக் கொடுப்புகளோடு வாக்களித்த மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வண்ணமாக தமிழர் தேசியம் நோக்கு நிலையினின்று கூட்டுப் பொதுப் பிரகடனம் செய்திட வேண்டும். அதுவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும், அங்கு ஏற்றும் சுடருக்கும், உயிர் கொடையானவர்களுக்கும் கௌரவமாகவும் வாக்களித்த மக்களுக்கும், தேசத்திற்கும், தேசியத்திற்கும் கவசமாக அமையும் என்பதையும் உறுதியுடன் கூறுகின்றோம். - என்று உள்ளது.






















# முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி அம்பாறையில் நேற்று முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்ட வலிந்து காணா மலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தி னரால் ஆரம்பிக்கப்பட்ட முள்ளிவாய்க் கால் இனவழிப்பு வாரம் மற்றும் முள்ளி வாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நினைவேந்தல் பிரார்த்தனை யும் சங்கத்தின் மாவட்டத் தலைவி தம்பி ராசா செல்வராணி தலைமையில் நேற்று நடைபெற்றன.

சங்கத்தின் நிருவாக உறுப்பினர்க ளின் பங்கேற்புடன் இந்நிகழ்வு திருக் கோவில் தம்பிலுவில் பொதுச்சந்தைக்கு முன்பாக இடம்பெற்றது.

சிறப்பாக இடம்பெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான தாமோதரம் பிர தீவனும் கலந்து கொண்டிருந்தார்.மேலும் விசேட பூசைவழிபாடு இடம்பெற்றபின்னர் முள்ளிவாய்க்கால் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்கள், வர்த்தக நிறுவ னங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் உள்ள கஞ்சி காய்ச்சப்பட்டு சிரட்டைகளில் மக் களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

நேற்று முதலாவது இந்நிகழ்வு ஆரம் பிக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் எதிர் வரும் 18 ஆம் தேதி வரை இந்த முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்படும் என ஏற்பாட்டாளர் கள் தெரிவித்தனர்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வைப்பதற்கான அரிசியை ஒவ் வொரு கடையாகச் சென்று பிடி அரசி பெற்று சேமித்தே காய்ச்சியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# விமானப்படை வீரர்களுடன் கலந்துரையாடினார் மோடி

பஞ்சாபில் உள்ள ஆதம்பூர் விமானப்படை தளத்துக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, வீரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் துணிச்சலை பாராட்டியுள்ளார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குக் காரணமாக இருந்த பயங்கரவாதிகளையும் அவர்களுக்கு துணை போனவர்களையும் எங்கிருந்தாலும் இந்தியா வேட்டையாடும் என்று பிஹாரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி ஆவேச உரையாற்றினார்.

இதையடுத்து, கடந்த 7 ஆம் திகதி இந்திய விமானப்படை 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இவற்றில் 5 முகாம்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும், 4 முகாம்கள் பாகிஸ்தானிலும் இருந்தவை. இந்த தாக்குதலில், பயங்கரவாத முகாம்களின் கட்டடங்கள் கடுமையாக சேதப்படுத்தப்பட்டன. இந்த தாக்குதலில், குறைந்தது 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று இராணுவம் தெரிவித்தது.



இதையடுத்து, பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே 4 நாள்கள் நடந்த இராணுவ மோதல் கடந்த 10 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. இந்த மோதலில், இந்திய பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 5 பேர் வீர மரணமடைந்தனர் எனவும் பாகிஸ்தான் தரப்பில் 40 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் இந்திய இராணுவம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தானின் அணு ஆயுதங்களுக்கு இந்தியா அஞ்சாது என்றும், பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அறிவித்தார். மேலும், இராணுவ மோதல் நிறுத்தப்பட்டுள்ளதே தவிர, படைகள் களத்தில் இருந்து தொடர்ந்து கண்காணித்து வருவதாகக் கூறினார்.

இந்நிலையில், பிரதமர் மோடி பஞ்சாபில் உள்ள ஆதம்பூர் விமானப் படை தளத்திற்கு சென்றுள்ளார். விமானப்படை வீரர்களுடன் கலந்துரையாடிய அவர், வீரர்களின் துணிச்சலை பாராட்டினார். வீரர்களுடன் சேர்ந்து புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டார்.

இந்த கலந்துரையாடல் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி, "இன்று அதிகாலையில், நான் AFS ஆதம்பூருக்குச் சென்று நமது துணிச்சலான விமானப்படை வீரர்களைச் சந்தித்தேன். தைரியம், உறுதிப்பாடு மற்றும் அச்சமின்மை ஆகியவற்றை வெளிப்படுத்துபவர்களுடன் இருப்பது மிகவும் சிறப்பான அனுபவமாக இருந்தது. நமது ஆயுதப்படைகள் நமது தேசத்திற்காகச் செய்யும் அனைத்திற்கும் இந்தியா என்றென்றும் நன்றியுடன் இருக்கிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பொள்ளாச்சி துஷ்பிரயோக வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை

பொள்ளாச்சி பாலியல் துஷ்பிரயோக வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக 85 லட்சம் இந்திய ரூபா இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், குற்றவாளிகள் 30 நாள்களுக்குள் மேல் முறையீட்டுக்குச் செல்லும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் சுரேந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

கோவையை அடுத்த பொள்ளாச்சியில் இளம் பெண்களை காணொலி எடுத்து பாலியல் துன்புறுத்தல் செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் கடந்த 2019 பெப்ரவரி மாதம் பொள்ளாச்சி அனைத்து மகளிர் பொலிஸ் துறையில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் சபரிராஜன், திருநாவுக்கரசு, சதீஷ், வசந்தகுமார், மணிவண்ணன், பாபு, ஹேரன்பால், அருளானந்தம் மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேர் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் 48 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. சுமார் 200 இற்கும் மேற்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்கில் லப்டப், செல்போன், மெமரிகார்டு, கார் உள்ளிட்ட 30 இலத்திரனியல் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. குற்றப்பத்திரிகை 390 பக்கங்கள் என வழக்கு விசாரணை ஆவணங்கள் மொத்தம் 1,500 பக்கங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.



இந்திய தண்டனை சட்ட பிரிவில் 120பி, 366, 342, 354 (ஏ), 354 (பி), 376 (டி), 376 (2) (என்), 509 மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டம், தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சட்ட பிரிவு 4 ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அரசு தரப்பில் சி.பி.ஐ. சிறப்பு வழக்கறிஞர் சுரேந்திரமோகன், எதிர் தரப்பில் வழக்கறிஞர் பாண்டிராஜ் ஆகியோர் ஆஜராகினர்.

அண்மையில் கைதான 9 பேரும் கோவை மகளிர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களிடம் நீதிபதி நந்தினி தேவி, சாட்சி விசாரணை குறித்து தனித்தனியாக சுமார் 50 கேள்விகளை கேட்டார்.

தொடர்ந்து எதிர்தரப்பு சாட்சி விசாரணைக்காக பொள்ளாச்சி நகர சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை இருப்பிட மருத்துவரிடம் விசாரணை நடைபெற்றது. வழக்கில் அரசு மற்றும் எதிர்தரப்பு விசாரணை முடிவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு மே 13 ஆம் திகதி வழங்கப்படும் என மகளிர் நீதிமன்றம் அறிவித்தது.

அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைதான 9 பேரும் குற்றவாளிகள் என்று கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினிதேவி நேற்று தீர்ப்பு வழங்கினார். 9 பேருக்குமான தண்டனை விவரம் மதியம் அறிவிக்கப்படும் என்றார். அதன்படி பகல் 12.50 மணியளவில் தண்டனை விவரம் வெளியானது.

அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக 85 லட்சம் இந்திய ரூபா இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சவூதி அரேபியாவிற்கு விஜயம்

தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் இராஜதந்திர பயணத்தைத் தொடங்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நேற்று சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானை சந்தித்துள்ளார்..

வர்த்தகம், இருநாட்டு உறவு, இஸ்ரேல் - ஹமாஸ் போர், ஈரான் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி கட்டார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

# அமெரிக்கப் பொருள்களுக்கு கூடுதல் வரி விதிக்கும் இந்தியா

அமெரிக்க தயாரிப்புகளுக்கான இறக்குமதி வரியை அதிகரிக்க இந்தியா முடிவெடுத்துள்ளது. உலக வர்த்தக அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் இதனை இந்தியா தெரிவித்துள்ளது.



அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்கப் பொருள்களுக்கு சீனா, இந்தியா, கனடா உள்பட பல்வேறு நாடுகள் அதிக இறக்குமதியை விதிப்பதாகக் குற்றம் சாட்டினார். இதையடுத்து, உலகின் பல்வேறு நாடுகளின் பொருள்களுக்கு பரஸ்பர வரி விதிப்பு முறையை அமுல்படுத்தப் போவதாகவும் ட்ரம்ப் கூறினார்.

அதன்படி, சீனா, இந்தியா, கனடா, மெக்சிகோ, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் என பல்வேறு நாடுகளுக்கு கூடுதல் இறக்குமதி வரி அறிவிக்கப்பட்டது. இந்தியாவுக்கு 26 வீத இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. எனினும், அமெரிக்காவுடன் பொருளாதார ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள நாடுகள் முன்வந்ததை அடுத்து, வரி வகிதம் சராசரியாக 10 வீதமாக குறைக்கப்பட்டது.

அதேநேரத்தில், சீனாவுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரிக்கு அந்நாடு எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, வரி விகிதத்தை மேலும் அதிகரித்தது அமெரிக்கா. பதிலுக்கு சீனாவும், அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை அதிகரித்தது. வரியை அதிகரிப்பதில் நிகழ்ந்த போட்டி காரணமாக, சீன பொருள்களுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா 145 வீதம் வரை உயர்த்தியது. அமெரிக்கப் பொருள்களுக்கான வரியை சீனா 125 வீதம் வரை உயர்த்தியது.

இந்நிலையில், அமெரிக்கா - சீனா இடையே சமீபத்தில் ஜெனிவாவில் நடைபெற்றபேச்சுவார்த்தையின்போது, இரு நாடுகளும் வரியை குறைக்க ஒப்புக்கொண்டன. சீன பொருள்களுக்கான இறக்குமதி வரியை 10 வீதமாக குறைக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசன்ட் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியது. இதற்கான பேச்சுவார்த்தைகளில் வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். இரு நாடுகளுக்கு இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உலக வர்த்தக அமைப்பிடம் இந்தியா சமர்ப்பித்த மே 12 ஆம் திகதியிட்ட ஆவணத்தில், அமெரிக்காவில் தயாரிக்கப்படும் சில பொருள்களுக்கு கூடுதல் இறக்குமதி வரி விதிக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனங்கள் ப்ளூம்பெர்க் மற்றும் ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளன.

“அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தயாரிப்புகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை நிறுத்தி வைப்பது அல்லது அவற்றின் மீதான வரிகளை அதிகரிப்பது எனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.” என்று அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ப்ளூம்பெர்க் மற்றும் ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேநேரத்தில், எந்த வகையான பொருள்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்பது பற்றி அதில் கூறப்படவில்லை. இந்த நடவடிக்கை ட்ரம்பின் இரண்டாவது பதவிக்காலத்தில் இந்தியாவின் முதல் பழிவாங்கும் நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் -14.05.2025




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதி காரிகளின் பாராட்டைப் பெரும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப் படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாது காப்பு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களின் ஆற்றல் அதிகரித்து காணப்படும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்தி சாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற் கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல் லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





இன்று கவனமாகக் கையாள வேண் டிய கடினமான சூழ்நிலைகள் காணப் படும். இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வ தன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படு வீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் காரணமாக முதுகுவலி காணப்படும். மனதை தெளிவாக வைப்பதன் மூலம் சிறப்பாக உணரலாம்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கைக் மேற் கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று சிறிது பதற்றம் காணப்படும். இதனால் கால் வலி ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிக ளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல் திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந் துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

இன்று உங்களின் மன உறுதி காரணமாக உங் களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான் நாள்.

பணி தொடர்பான பயணம் காணப் படுகின்றது. குறித்தநேரத்தில் பணி களை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப் படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாது காப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரண மாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ்நிலைகளை கவன மாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ள தால் உங்கள் பணிகளை கவனமாக மேற் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

5நிதியைப் பொறுத்தவரை எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. அதனால் நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் காரணமாக கால் மூட்டுக்களில் வலி ஏற்பட வாய்ப் புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் சிறந்த பலனை அளிக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப் படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர் கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர் களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந் துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் -14.05.2025




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதியவேலைவாய்ப்புகள்உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித் தது போன்ற உணர்வு உங் களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணறவும் மகிழ்ச்சியும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.

நல்ல சுறுசுறுப்பு மற்றும் மனதிடம் காரணமாக இன்று உங்களிடம் ஆற்றல் நிரம்பி இருக்கும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும். கையிலிருக்கும் பணத்தை சேமிக்க வேண்டியது அவசியம். தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

செரிமானப் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே காரமான உணவு வகைகளை தவிர்ப்பது நல்லது.




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ் நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. நீங்கள் கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம்.

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது நல்லது.

# இறக்குமதி செய்யப்பட்ட உப்பு இரண்டு வாரங்களுக்குள் நாட்டிற்கு



இறக்குமதி செய்யப்பட்டுள்ள உப்புத் தொகை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நாட்டை வந்தடையும் என லங்கா உப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் அம்பாந் தோட்டை, ஆனையிறவு மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு அறுவடைக்கு பாதிப்பு ஏற்பட்டதுடன் இதன் காரணமாககடந்தமார்ச்15ஆம்திகதிமுதல்உப்பு தட்டுப்பாடு நிலவியதாக அந்த நிறுவனத்தின் தலைவர் டி.நந்தனதிலக்க தெரிவித்தார்.

இந்நிலையில், லங்கா உப்பு நிறுவனம் 10 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பையும், தேசிய உப்பு நிறுவனம் 20 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பையும் இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உறுப்பினரான நிலுக் தில்ஹான், அரசாங்கத்தின் ஊடாக உப்பு இறக்குமதி இடம்பெறுவதால் இறக்குமதி செய்யப்பட்ட உப்பு தொகை நாட்டை வந்தடைவதில் சற்று தாமதம் நிலவுவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் ஒரு மாதத்திற்கு சுமார் 15 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பு தேவைப்படுகிறது.

எனினும் கடந்த ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்காக 30 ஆயிரம் மெட்ரிக் தொன் உப்பு இறக்குமதி செய்யப்பட்டது.

எனவே, ஏப்ரல் மாதம் நிறைவடைந்து தற்போது மே மாதமாகியுள்ளது.

இந்நிலையில் மீதமுள்ள உப்புத் தொகைஅடுத்தஇரண்டுவாரங்களுக்குள் நாட்டிற்கு வந்தடையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் நிலுக் தில்ஹான் தெரிவித்தார்